# திருவெறும்பூர் பேரூராட்சி

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

**ந.க.எண். 247 /2009** **நாள்: 25.10.2010**

# <u>மாநில அரசு நிதி உதவி திட்டம் (சுற்றுலா துறை) 2010-11</u>

## <u>ஒப்பந்தப்புள்ளி அழைப்பு</u>

1. திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவெறும்பூர் பேரூராட்சி **<u>2010-11 ம் ஆண்டு மாநில அரசு நிதி உதவி (சுற்றுலா துறை)</u>** திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பகிரங்கமாக பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர்கள் திருவெறும்பூர் பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும்.
2. பணிகளுக்கு உரிய ஒப்பந்த படிவங்களை விளம்பரம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து **<u>10.11.2010 ம் தேதி புதன் கிழமை பிற்பகல் 3.00 மணி</u>** வரை உள்ள வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் உரிய தொகையினை திருவெறும்பூர் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது **<u>'செயல் அலுவலர்' 'திருவெறும்பூர் பேரூராட்சி</u>** ' என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்களை பதிவு தபால் மூலமாகவோ, அல்லது விரைவு தபால் மூலமாகவோ, பெற விரும்புவோர் உரிய தொகைக்கு மேல் கூடுதலாக ரூ.200/– செலுத்த வேண்டும். தபால் வழி தாமதங்களுக்கு நிர்வாகம் பொறுப்பேற்க இயலாது.
3. ஒவ்வொரு பணிக்கும் அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள டேவணித் தொகையை வங்கி வரைவோலையாகவோ **'செயல் அலுவலர்' 'திருவெறும்பூர் பேரூராட்சி** ' என்ற முகவரிக்கு செலுத்தப்பட வேண்டும்.
4. பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை திருவெறும்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **<u>11.11.2010 ம் தேதி வியாழக் கிழமை பிற்பகல் 3.00 மணி</u>** வரை பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை திருவெறும்பூர் பேரூராட்சியில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் **<u>அன்றைய தினம் பிற்பகல் 3.30</u> மணிக்கு** திறக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும்.
5. ஒப்பந்தபுள்ளிகளை முடிவு செய்வதில் மன்றத்தின் முடிவே இறுதியானதாகும். திட்டப் பணிகள் நடைபெறும் போது சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளால் மேல் ஆய்வு செய்யப்படும்.
6. (Civil Engineering Construction) கட்டுமான தொழிலில் குறைந்தது ஐந்து ஆண்டுகள் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.
7. சாலைப்பணியில் – சிமெண்ட் சாலை ஒரு பணி ஒப்பந்தப்புள்ளி கொடுக்க உள்ள பணியின் மதிப்பீட்டில் 50 % மதிப்பில் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டில் எடுத்து செய்து முடித்திருக்க வேண்டும்.
8. கடந்த மூன்று ஆண்டுகளில் ஏதாவது ஒரு நடப்பு ஆண்டில் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் மதிப்பீட்டில் குறைந்தது 50 % ம் மதிப்பிற்கு பணிகள் எடுத்து செய்திருக்க வேண்டும். ( Not Less than 50 % of the Volume put to tender in a financial year )
9. ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் பணியின் மதிப்பில் 15 % மதிப்பிற்கு குறையாமல் வங்கி கணக்கில் ஒப்பந்ததாரர் பெயரில் இருப்பில் உள்ளதற்கு ஆதாரம் கொடுக்க வேண்டும். **<u>(Pass Book Xerox Copy) (Working capital available )</u>**
10. ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் பணியின் ஒப்பந்த மதிப்பில் ( Work bid Value ) 1 % சதவிகிதம் வங்கி வரைவோலை (DD) அல்லது வங்கி காசோலையாக (Bankers Cheque) ஒப்பந்தப்புள்ளி டேவணித்தொகை செலுத்த வேண்டும்.(Earnest Money Deposit)
11. ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் பணியின் ஒப்பந்த மதிப்பில் ( Work bid Value ) 1 % சதவிகிதம் பாதுகாப்பு வைப்புத்தொகையாக **<u>( Security Deposit )</u>** செலுத்த வேண்டும்.
12. பணி நடைபெறும் பொழுது கொடுக்கப்படும் ஒவ்வொரு பகுதி பட்டியலிலும், குறைந்தது 5 % சதவிகிதம் தொகை பிடித்தம் செய்யப்படும்.
13. **<u>பணி முடிக்க வேண்டிய காலம் – ( Period of Completion )</u>**

i) **சிமெண்ட் சாலை** - பணி உத்தரவு கொடுக்கப்பட்ட நாளிலிருந்து 5 மாத காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டும்.

14. **ஒப்பந்ததாரர் தகுதி** (Classification of Contractor) - 1) குறைந்த பட்சம் II ம் வகுப்பு (Class II Contractor 2) ஒப்பந்தகாரராக பதிவு
15. **அபராதம் விதித்தது** பணிகள் செய்து முடிக்க இரு கட்டங்களாக எடுத்து கொள்ள வேண்டும்
    a. முதல் கட்டம் (I$^{st}$ Milestone), பணியின் மதிப்பில் அல்லது பணி அளவில் 1/3 மடங்கு பணிகள் முதல் மூன்று மாத காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டும்.
    b. இரண்டாம் கட்டம் (II$^{nd}$ Milestone) அனைத்து பணிகளும் அடுத்த மூன்று மாத காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டும். மேலே சுட்டி காட்டப்பட்ட காலகட்டத்திற்குள் பணிகள் செய்து முடிக்கவில்லை எனில் செய்து முடிக்கப்படாத பணியின் மதிப்பில் 0.1% தொகை அபராதம் நாள் ஒன்றுக்கு விதிக்கப்படுவதுடன் அப்பணி செய்து முடிக்கும் வரை தொடர்ந்து அபராதம் விதித்து அபராதத்தொகை வசூலிக்கப்படும்.

16. **ஒப்பந்தம் ரத்து செய்தல் மற்றும் ஒப்பந்ததாரரை கருப்பு பட்டியல் சேர்த்தல் (Termination of the Contractor)**
பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி செய்து முடிக்க வேண்டிய ஒப்பந்த காலத்திற்குள் பணி துவங்கப்பட்டு, செய்து முடிக்காமல் இருந்தால் மேலும் **45** நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டும் பணி செய்து முடிக்கப்படவில்லை எனில் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்து ஒப்பந்ததாரரை நீக்கம் செய்யலாம்.

17. **பணி பாதுகாப்புத்தொகை** (Defects liability period (2.5 % of value of work done will be retained till the completion of the period )

i) **சிமென்ட்சாலை** - பணி செய்து முடிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு காலத்திற்கு பணியின் மதிப்பில் 2.50 % பிடித்தம் செய்து இருப்பில் வைக்க வேண்டும்.

18. தெருவிளக்கு சாமான்கள் ஐ.எஸ்.ஐ. (ISI) தரச்சான்றிதழுடன் முத்திரை பெற்றிருக்க வேண்டும்.

19. சப்ளை செய்யப்படும் தெருவிளக்கு உதிரிபாகங்கள் தயாரிப்பாளர்களால்/அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மூலம் இந்திய தரச்சான்று அளிக்கப்பட்ட பொருட்கள் மட்டுமே உரிய முறையில் சப்ளை செய்ய வேண்டும். அதை ஒட்டிய அதன் விலைகள் விவரம் கொடுக்கப்படவேண்டும்.

20. தெருவிளக்கு சாமான்கள் அனைத்தும் ஐ.எஸ்.ஓ. 9000 (I.S.O-9000) / ஐ.எஸ்.ஓ (I.S.O) தரச்சான்று பெற்ற சாமான்கள் சப்ளை செய்ய வேண்டும்.

21. இதர நிபந்தனைகளை அலுவலக நேரத்தில், அலுவலக நாட்களில் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது சம்பந்தப்பட்ட பொறியாளரிடம் விபரங்களை பெறலாம்.

| வ. எ | வேலையின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | டேவணித் தொகை (ரூ) | ஒப்பந்தப் புள்ளி நமூனா விலை | விற்பனை வரி மற்றும் மேல் வரி | கூடுதல் | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | **"மாநில அரசு நிதி உதவி திட்டம் (சுற்றுலா துறை) 2010.11"**<br>**மலைக்கோவில் கிரிவல பாதையில் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ளுதல்.** | | | | | | |
| **1** | திருவெறும்பீஸ்வரர் மலைக்கோவில் கிரிவலப் பாதையை (கோவிலை சுற்றியுள்ள பாதை மற்றும் கோவிலின் முன்புறப் பாதை ) சிமென்ட் தள சாலையாக மாற்றுதல். | 4227854 | **42280** | **9000** | **360** | **9360** | **150 நாட்கள்** |
| **2** | 1) பொது மக்கள் அமர பெஞ்ச் அமைத்தல் | 50000 | **1600** | **600** | **24** | **624** | **60 நாட்கள்** |
| | 2) அலங்கார ஒளி விளக்கு மற்றும் அடர்மின் சேமிப்பு விளக்கு அமைத்தல் | 100000 | | | | | |
| | 3) பூங்கா போன்று செடிகள் | 10000 | | | | | |
| | **மொத்தம்** | **160000** | | | | | |

**(ஒம்).க.பன்னீர் செல்வம்**
**தலைவர்**
திருவெறும்பூர் பேரூராட்சி
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

**(ஒம்).இரா.முத்துக்குமார்**
**செயல் அலுவலர்**
திருவெறும்பூர் பேரூராட்சி
திருச்சிராப்பள்ளி மாவட்டம்